DIOCESE OF KUMBAKONAM

NEWS - LETTER

(Compiled and Edited by Diocesan News-Letter Committee)

VOL. : 52 NOVEMBER - 2025 No. 11



The poor have much to teach us about the Gospel and its demands (*DT* 109)

ஆயரின் செய்தி

இறை நம்பிக்கையில் வளர்வோம்!
ஏழைகள் மீது அன்பு கொண்டு வாழ்வோம்!!

நமது அன்புமிக்க திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் கடந்த அக்டோபர் திங்கள் 9-ஆம் நாள் "நான் உங்களை அன்பு செய்தேன்" (Dilexi te) என்ற தனது அப்போஸ்தலிக்க அறிவுரை மடலை வெளியிட்டார். இக்காலத்தின் அறிகுறிகளுக்கேற்ப இம்மடலை அவர் விதைத்துள்ளது பாராட்டுக்குரியது. உலகில் உள்ள நல்மனத்தோர் அனைவருக்கும் சிறப்பான அழைப்பு ஒன்றை இம்மடல் வழியாக அவர் விடுத்துள்ளார். ஏழைகளை அன்பு செய்யவும், அவர்கள் மீது கரிசனை கொண்டு வாழ்வதற்குமான அழைப்புதான் அது. நமது இறைநம்பிக்கையும், ஏழைகள் மீதான அன்பும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாத அளவுக்கு பின்னிப்பிணைந்துள்ளது என்ற உண்மையை விவிலியம், திருஅவையின் வரலாறு, மற்றும் புனிதர்களின் வாழ்வு ஆகியவற்றின் பின்னணியில் இம்மடல் அழகுற நமக்கு விளக்குகிறது.

இம்மடல் திருஅவை ஏழைகளுக்கான திருஅவையாக வாழ, மனிதரிடையே நிலவும் பலதரப்பட்ட ஏழ்மைகளைக் களைய தனது அர்ப்பணத்தை புதுப்பித்துக் கொள்ள ஓர் அறைகூவல் விடுக்கிறது. இறையன்பும், ஏழைகள் மீதான அன்பும் ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புடையவை. ஏழைகள் இறைவனின் முகத்தை பிரதிபலிக்கின்றனர். அவர்கள் மீதான நமது நேர்மையான அன்பு, நாம் இறைவன் மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாக அமைய வேண்டும். வலுவற்றோர் சார்பாகவும், ஏழைகள் சார்பாகவும் நாம் உறுதியான நிலைப்பாடு எடுக்க இம்மடலில் திருத்தந்தை அழைப்பு விடுக்கிறார். ஏழைகள் மீதான அன்பை ஒரு சாதாரண மனித அன்பாகக் கருதக்கூடாது, மாறாக இது அதைவிடப் பெரியது. அது ஓர் இறைவெளிப்பாடு. பழைய ஏற்பாட்டில் இறைவன்

தன்னை ஏழைகளுடைய நண்பராகவும், விடுதலை அளிப்பவராகவும் வெளிப்படுத்துகிறார். நமது ஒட்டுமொத்த மீட்ப வரலாறும் ஏழைகளின் இருத்தலை அழகாய் நமக்கு அடிக்கோடிட்டு காட்டுகின்றது.

ஏழைகள் மீதான நமது நிலைப்பாடு என்பது மற்றவர்களை புறந்தள்ளுகிற ஒரு முயற்சி என்று கருதுதல் தவறு. இம்மடல் கிறிஸ்தவர்களை எதார்த்தமான செயல்வடிவிலான இரக்கச் செயல்களை மேற்கொள்ளவும், ஆன்மிக அக்கறை கொள்ளவும், ஏழைகளுக்கு உணவு அளிக்கவும் பரிந்துரைக்கிறது. இறைவார்த்தையையும், வரலாற்று திருஅவையின் போதனைகளையும் மேற்கோள்காட்டி திருத்தந்தை நம்மை ஏழைகள் சார்பாக வாழ அழைக்கிறார். நோயுற்றோர், சிறைப்பட்டோர், படிப்பறிவற்றோர், புலம்பெயர்ந்தோர் போன்றவர்களுக்காகவே தங்கள் வாழ்வை அர்ப்பணித்த பல புனிதர்களை இம்மடல் நினைவுகூறுகிறது. இந்த நவீன உலகில் செழிப்பாக வளர்ந்த நாடுகளில் உள்ள வறுமையையும், அங்கு உள்ள புறந்தள்ளப்பட்ட விளிம்பு நிலையில் இருக்கும் பெண்கள் போன்றோர் எதிர்கொள்கின்ற சவால்களையும் இம்மடல் எடுத்தியம்புகிறது. எனவே திருஅவை ஏழ்மை திருஅவையாக இருப்பதோடு அல்லாமல், ஏழைகளுக்கான திருஅவையாக மாற அதற்கேற்றவாறு நம் கிறிஸ்தவ வாழ்வில் பயணிக்க அழைப்புக் கொடுக்கிறது இம்மடல்.

நமது மறைமாவட்ட பங்குகள் மற்றும் நிறுவனங்களில் நாம் சந்திக்கின்ற ஏழைகளை, நோயுற்றோரை, சிறைப்பட்டோரை, புலம்பெயர்ந்தவர்களை இனங்கண்டு அவர்களுக்கு சிறப்பான பணிபுரிய நாம் முன்வரவேண்டும். அதற்கேற்ப திட்டங்களை வகுத்தலும், செயல்படுத்துதலும் நாம் பெற்ற இறையழைத்தலுக்கான பதிலாக அமைந்திடவும் நாம் உறுதிபூண்டு ஒன்றாகப் பயணிப்போம்.

வாழ்த்துகளுடன்,


+ ஆயர் **A.** ஜீவானந்தம்

Bishop's Programme – NOVEMBER 2025

Date	Day	Time	Programme
02	Sun	8.00 a.m.	All Souls' day Mass: Cathedral, Kumbakonam
03	Mon	9.30 a.m.	Jubilee Mass: Pondicherry
07	Fri	6:00 p.m.	Diaconate Ordination: Claret Illam, Kumbakonam
08	Sat	10.00 a.m.	Month's Mind Mass: Lalgudi
09	Sun	8.30 a.m	Dalit Liberation Sunday Mass, Pullambadi
09 - 14		Sun to Fri	Retreat: Batch - I
14 - 16		Fri to Sun	Pastoral Visit and Confirmation : Villiavarambal
16 - 21		Sun toFri	Retreat: Batch - II
22	Sat	10.00 a.m.	Project Committee Meeting, Kumbakonam
24	Mon		Visitor's Day: Fathers and Sisters
25	Tue		Visitor's Day: Lay People
29	Sat	10.00 a.m.	Blessing of New Class Rooms: Perumalpalayam

திருத்தந்தையோடு மன்றாடுவோம்

நவம்பர் : தற்கொலை தடுப்பிற்காக...



தற்கொலை எண்ணங்களால் போராடுபவர்கள் தங்களுக்குத் தேவையான ஆதரவு, அக்கறை, அன்பு ஆகியவற்றைத் தங்கள் சமூகத்தில் கண்டுணரவும், வாழ்வின் அழகிற்கு உள்ளத்தைத் திறந்திடவும் நாம் மன்றாடுவோம்.

BIRTHDAY

01.11.1977	Fr. J. Amarsingh Eliazar	Kumbakonam
02.11.1942	Fr. A. Antoine	Ayyampet
04.11.1959	Fr. R. Peter Arokiadoss	Vengankudi
07.11.1975	Fr. M. Adaikalam Donald	Chennai
10.11.1974	Fr. G. Arockiaraj	Annamangalam
10.11.1977	Fr. J. Ruban Antoniraj	Poondi
10.11.1988	Fr. S. Johnson	Viragalur
14.11.1974	Fr. S. Rajasekar	Ayyampet
16.11.1968	Fr. J. Michael Raj	Kottapalayam
20.11.1977	Fr. A. Paul Jaya Kumar	Chennai
20.11.1980	Fr. A. Susai Devanesan	Kattuputhur
21.11.1976	Fr. J. Joel Nirmal Raj	Germany
23.11.1946	Fr. S. Daveedu	Kumbakonam
24.11.1961	Fr. J. Antony Joseph	Kumbakonam
26.11.1965	Fr. A. Sahayaraj	Alambakkam

NECROLOGY

01.11.2006	Rev. Fr. John Peter	Kumbakonam
06.11.1985	Rev. Fr. T. A. Rajamanickam	Kumbakonam
16.11.1966	Rev. Fr. S. Arputhasamy	Viragalur
25.11.1984	Rev. Fr. P. S. Sebastian	Kumbakonam
30.11.1988	Rev. Fr. A. P. Arulsamy	Kumbakonam
30.11.1990	Rev. Fr. M. David	Kumbakonam
30.11.2005	Rev. Fr. M. D. Solomon	Kumbakonam

Most Rev. Dr. **JEEVANANDAM AMALANATHAN** D.D., S.T.D.,
Bishop of Kumbakonam.

Personal : 00-91-435-2431927
Office : 00-91-435-2432232
Fax : 00-91-435-4243679
Office Email : kumbakonamdiocese@gmail.com
Personal Email : frjeeva@gmail.com
Website : www.dioceseofkumbakonam.org

Bishop's Circular Regarding the Annual Retreat for the Clergy Diocese of Kumbakonam - 2025

Rev. and dear Fathers,

I would like to bring to your notice the following requests regarding the Annual Retreat to be held in two batches at Poondi Madha Retreat Cum Worship Centre, Poondi from Nov. 09 Sunday Evening till Nov. 14 Friday Noon, 2025 & from Nov. 16 Sunday Evening till Nov. 21 Friday Noon, 2025.

1. I invite all of you to attend the Annual Retreat without fail. This year the retreat will be preached by Rev. Fr. Susairaj, S.J., for the first batch and Rev. Fr. Maria Arul Raja, S.J., for the second batch.

1.1 "Priests as well as deacons aspiring to the priesthood are obliged to fulfill the Liturgy of the hours daily in accordance with the proper and approved liturgical books..." (CIC, C. 276 § 3).

1.2 "They (Clerics) are... bound to make a retreat according the prescriptions of particular law"(CIC, C.276§4).

1.3 "They (Clerics) are to be conscientious in devoting time regularly to mental prayer, in approaching the sacrament of penance frequently, in cultivating special devotion to Virgin Mother of God, and in using common and particular means for their sanctification" (CIC, C.276§5).

2. In case you are not able to attend the Annual Retreat this year (2025) for any grave reason, get a prior written permission from me. Also inform me when and where you are going to make your Annual Retreat, and get my signature in your Mass Diary.

Most Rev. Dr. **JEEVANANDAM AMALANATHAN** D.D., S.T.D.,
Bishop of Kumbakonam.

Personal : 00-91-435-2431927
Office : 00-91-435-2432232
Fax : 00-91-435-4243679
Office Email : kumbakonamdiocese@gmail.com
Personal Email : frjeeva@gmail.com
Website : www.dioceseofkumbakonam.org

3. All the Rev. Fathers who are working in the educational Institutions are expected to attend the Annual Retreat without seeking any exemption.

4. You are expected to attend all the sessions and **keep complete silence** everywhere during the entire retreat.

5. It is a closed-retreat. So kindly by **all means avoid going out** till the retreat is over.

6. Kindly **be on time** for all the spiritual exercises, conferences during the retreat.

7. For any special need you may contact Fr. M. Philomindas, Vicar General (Cell: 7598455933), Fr. J. Antony Joseph, Procurator (Cell: 9942325251) and Fr. G. Jayan, Secretary (Cell: 9442440603).

"Jesus went out to a deserted place, and there he prayed" (Mk 1:35).

Yours sincerely in our Lord,

+ Jeevanandam

+ A. Jeevanandam,
Bishop of Kumbakonam.

DIOCESAN EDUCATIONAL SCHOLARSHIP

Out of 95 parishes, 70 parishes sent 293 filled-in applications for educational scholarship for the poor and deserving students. Out of them, SC students are 157 and other students are 136. Among them 15 applicants are studying in Hr.Sec.Schools. As an exception, Bishop allowed these applications on special ground. In future the already established criteria will be followed, after discussing the matter in the next Annual Diocesan Clergy Meeting. In the Scholarship Committee meeting held at Poondi on 23-10-2025, it was decided to offer an amount of Rs.2500/- each for the School students (15) and Rs.3,000/- each to the rest of the 278 applicants. Hence this year a total amount of Rs.8,71,500/- will be distributed to the beneficiaries by cheques through the concerned parish priests.

The members recommended that the Bishop may through the Vicars Forane ask the parish priests of those 25 parishes the reasons for not sending the duly filled applicaations.

Msgr.M.Philomindas
Vicar General

APPOINTMENT & CHANGE OF MINISTRY

1. Rev.Fr. Marceline Antoniraj who was the parish priest of Padalur was relieved from his office and he is sent to the diocese of Potenza in Italy for pastoral ministry for 5 years. He has reached Italy safe.
2. Rev.Fr. V. William Edward is appointed as the Parish Priest of Padalur with effect from 26-10-2025. He holds this position as an additional charge.
3. Rev.Fr. A. Bruceline Binith is going to Netherland for Pastoral ministry from November 2025 for a period of 5 years.

+ Bishop A. Jeevanandam

JUNIOR CLERGY PROGRAM

Pastoral Orientation for our Junior Clergy was conducted for two days (Oct. 29-30, 2025) in Aruppe Illam, Mettupalayam. 13 priests participated. Topics such as Present day pastoral Challenges and creative and innovative approach to them, Holistic health care, Account keeping and Properties and Society were dealt with. Discussion and sharing of their priestly ministry took place on the second day. Together with the resource persons, the team consisting of the Bishop, Vicar General, and Procurator animated the participants. All the participants visited our Villa in Kotagiri. After two days of programmes, all left Aruppe Illam on October 30th at 4:30 p.m.

Msgr.M.Philomindas
Vicar General

FROM THE PROCURATOR'S OFFICE

Dear Rev. Fathers,

Greetings from Fr. J. Antony Joseph, Procurator!

The following is the list of Parishes, Institutions and Priests who have contributed to the Dioceses (September 2025):

Slab Contribution for 2024-2025	
Keelamichaelpatti Parish	5000
for 2025-2026	
Cathedral Parish	100000
Jayankondam Parish	60000
Keelamichaelpatti Parish	15000
Keelaneduvai Parish	5000
Koovathur	20000
Malathankulam Parish	7000
Pavanamangalam Parish	5000
Sembodai Parish	5000
Soosaiapparpattinam Parish	15000
Vadagarai Parish	30000
Salary Contribution from Priests	
Fr. G. Arockiaraj - September 2025	84050
Fr. Arul Sebastian - September 2025	47510
Fr. R. Fredrick David - September 2025	74000
Fr. L. Robert Selvan - July 2025	103470
Fr. U. Rajendra Sekar - September 2025	59086

Pension Contribution	
Fr. L. Benjamin	32000
Fr. J. John Panneerselvam	14000
Community Hall Contribution	
Kallakudi Parish	100000
Thiruppanthurithi Parish	75000
Vadugarpet Parish	50000
Mass Intention	
Poondi Madha Basilica,	1000000
Vadugarpet Parish	50000
Keelaneduvai Parish	10500
Jayankondam Parish	28350
Soosaiapparpattinam Parish	10000
Pavanangalam Parish	5000
Koovathur Parish	20000
Contribution to Diocese	
Poondi Madha Basilica	1000000
Contribution from Priests - Doing Ministry Abroad	
Fr. S. Chinnapparaj	300000
Fr. T. Xavier	200000
Fr. David Ramesh	200000
Mission Sunday Collection	
Papanasam	200000
Koovathur	30000
Holy Childhood Collection	
Papanasam	5000
Koovathur	2000

I extend my heartfelt thanks to everyone who has contributed by way of slab, salary, marriage hall income, mass intentions, etc.,

I suppose , by this time many parishes would have completed the collection of mission sunday. I request you to remit the same to the procurator's office without delay.

I Place my request to all the parish priests to pay the slab for this financial year (2205-2026) before March-2026.

All the parish priests are requested to remit the slab for 2025-2026 with in the end of this financial year. In the same way you are requesed to pay the share to be given tot he diocese from marriage and community halls.

Yours in Christ,

Fr. J. Antony Joseph,

Procurator.

வத்திகான் செய்திகள்

முதுமையின் மேன்மை: பொதுமக்கள், குடும்பம் மற்றும் வாழ்க்கைக்கான திருப்பீடத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட மேய்ப்புப்பணி பராமரிப்பு குறித்த இரண்டாவது பன்னாட்டு மாநாட்டின் உறுப்பினர்கள் 150 பேரை, அக்டோபர் 3, வெள்ளியன்று திருத்தந்தை சந்தித்தார். அப்போது முதியவர்கள் பற்றி பேசிய அவர், முதியவர்கள் ஒரு கொடை, வரவேற்கப்பட வேண்டிய ஓர் ஆசிர் என்றும், நீண்ட ஆயுள் என்பது ஒரு நேர்மறையான விடயம், அது நம் காலத்தில், உலகின் ஒவ்வொரு பகுதியிலும் நம்பிக்கையின் அறிகுறிகளில் ஒன்றாக விளங்குகின்றது என்றும் அழகுற முதுமையின் மேன்மையை எடுத்துக்கூறினார்.

யூபிலி ஆண்டிற்கான சிறப்புரை: அக்டோபர் 4, சனிக்கிழமை வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு "எதிர்நோக்கின் திருப்பயணிகள்" என்னும் யூபிலி ஆண்டிற்கான சிறப்பு மறைக்கல்வி உரையினை எடுத்துரைத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ. அவ்வுரையில் திருப்பயணம் என்பது ஒரு தேர்வு, யூபிலி ஆண்டில் புனிதக் கதவைக் கடந்து செல்லும் நாம் நம்பிக்கையில் ஆழப்படுகின்றோம், புதிய வாழ்க்கைக்குள் நுழைகின்றோம் எனவும், மேலும், யூபிலி என்பது உறுதியான நம்பிக்கையின் காலம், அதில் நம் இதயங்கள் மன்னிப்பையும் இரக்கத்தையும் காண முடியும் என்றும், இதனால் எல்லாம் புதிதாகத் தொடங்க முடியும் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

மறைப்பணி ஞாயிறுக்கான திருத்தந்தையின் செய்தி: அக்டோபர் 19, ஞாயிறன்று சிறப்பிக்கப்படும் உலக மறைப்பணி ஞாயிறுக்கான காணொளிச்செய்தி ஒன்றில் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், முழு திருஅவையும் ஒன்றிணைந்து, மறைப்பணியாளர்களுக்காகவும் அவர்களது திருத்தூது உழைப்பின் பலனிற்காகவும் செபிக்க இந்நாள் சிறப்பிக்கப்படுகின்றது என்றும் கூறியுள்ளார்.

மேலும், உலகில் உள்ள ஒவ்வொரு கத்தோலிக்க திருஅவையையும் உலக மறைப்பணி ஞாயிற்றுக்கிழமையில் பங்கேற்குமாறு கேட்டுக்கொண்டுள்ள திருத்தந்தை அவர்கள், செபங்கள், ஆதரவுகளினால், நற்செய்தியைப் பரப்பவும், மேய்ப்பு மற்றும் மத போதனைத் திட்டங்களை வழங்கவும், புதிய ஆலயங்களைக் கட்டவும், மறைப்பணிப் பகுதிகளில் உள்ள நமது சகோதர சகோதரிகளின் நலவாழ்வு மற்றும் கல்வித் தேவைகளைப் பராமரிக்கவும் உதவுவோம் என்று அன்பான அழைப்பை விடுத்தார்.

திருஅவையின் புதிய ஏழு புனிதர்கள்: அக்டோபர் 19 பொதுக்காலத்தின் 29ஆம் ஞாயிற்றுக்கிழமையன்று வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் புனிதர் பட்ட கூட்டுத் திருப்பலியானது நடைபெற்றது, புதிய ஏழு புனிதர்களைத் திருஅவையில் இணைக்கும் இத்திருப்பலியில் பங்கேற்பதற்காக உலகின் பல பகுதிகளிலிருந்தும் ஏறக்குறைய 70000 மக்கள் வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்தனர்.

துருக்கியாவைச் சார்ந்த பேராயர் இஞ்ஞாசியோ மலோயன், பாப்புவா நியு கினியைச் சார்ந்த பீட்டர் தோ ரோத், இறை - இரக்கத்தின் அருள்சகோதரிகள் சபை நிறுவனரான அருள்சகோதரி வின்சென்ஷா மரியா பொலோனி, திருநற்கருணை இயேசுவின் பணியாளர்கள் சபையைச் சார்ந்த அருள்சகோதரி மரியா கார்மன் ரெண்டிலஸ் மார்தினெஸ், கிறிஸ்தவர்களின் பாதுகாவலியான அன்னை மரியா சபையை சார்ந்த அருள்சகோதரி மரிய துரொன்காத்தி, வெனிசுலாவைச் சார்ந்த ஏழையரின் மருத்துவர் என அழைக்கப்படும் ஜோஸ் கிரகோரியோ பெர்னன்ஸ் சிஸ்னேரோஸ், பொம்பே புனித செபமாலை அன்னை தொமேனிக்கன் அருள்சகோதரிகள் சபையை நிறுவியவரான பர்த்தலோ லோங்கோ, ஆகியோர் புனிதர்களாக உயர்த்தப்பட்டனர்.

திருமண வாழ்வின் உன்னதம்: அக்டோபர் 18, சனிக்கிழமையன்று சிறப்பிக்கப்படும் குழந்தை இயேசுவின் புனித தெரசாவின் பெற்றோர்களான புனித லூயிஸ் மற்றும் ஜெலி மார்ட்டின் ஆகியோருக்கு புனிதர் பட்டம் வழங்கப்பட்ட 10வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அனுப்பியுள்ள செய்தியில் இத்தம்பதியரின் வாழ்வு திருமணத்தை புனிதத்திற்கான பாதையாக எடுத்துக்காட்டுகிறது என்று எடுத்துரைத்தார்.

மேலும், கடவுளால் அழைக்கப்படும் ஆண்களும் பெண்களும் ஒன்றிணையும் திருமணம் மிகவும் உன்னதமானது மற்றும் உயர்ந்தது என்றும், திருமணத்தின் வழியாக, திருமணத்தில், மற்றும் திருமணத்தினால் தாங்கள் புனிதர்களாக முடியும் என்பதை அறிந்துகொண்டவர்கள் குழந்தை இயேசுவின் புனித தெரசாவின் பெற்றோர்களான புனித லூயிஸ் மற்றும் ஜெலி மார்ட்டின் என்றும் திருத்தந்தை தெளிவுபடுத்தினார்.

இங்கிலாந்து அரசர் மற்றும் அரசியோடு திருத்தந்தையின் சந்திப்பு: அக்டோபர் 23, வியாழன் காலை வத்திக்கான் திருத்தூது மாளிகையில் இங்கிலாந்து அரசர் மூன்றாம் சார்லஸ் மற்றும் அரசி கமிலா ஆகியோரை சந்தித்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

அந்த சந்திப்பில், இருதரப்பு உறவுகளுக்கு இடையே தற்போதுள்ள நல்ல தொடர்பிற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. அதன்பின், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வறுமைக்கு எதிரான போராட்டம் போன்ற பொதுவான ஆர்வமுள்ள விடயங்கள் விவாதிக்கப்பட்டன. உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் போது அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான பகிரப்பட்ட அர்ப்பணிப்புக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பது இச்சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது.

கல்வியின் மேன்மையும் இளையோரின் தேவையும்: அக்டோபர் 30, வியாழக்கிழமை, வத்திக்கானில் “கல்வி உலகின் விழா”

என்ற தலைப்பில் நடைபெற்ற விழா ஒன்றில் பங்கேற்ற மாணவர்களுக்கு கல்வியின் மேன்மை குறித்தும் இளையோரின் தேவை குறித்தும் திருத்தந்தை அவர்கள் உரையாற்றினார்.

அந்த உரையில், சமூகத்தை மாற்றுவதற்கான திறவுகோல் கல்வி என்பதை எடுத்துக்காட்டிய திருத்தத்தை, கல்வி என்பது பார்வையை விரிவுபடுத்தி, இதயங்களை உண்மை மற்றும் கடவுளை நோக்கி உயர்த்தும் ஒரு தொலைநோக்கி என்று விவரிக்கப்படுகிறது என்றும் கூறினார். அதோடு கூட, இளம் பார்வையாளர்களை அன்புடன் வரவேற்று, அவர்களைச் சந்திப்பதில் தனது மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்திய திருத்தந்தை, இளைஞர்கள் வாழ்க்கையை முழுமையாக வாழவும், நம்பிக்கையையும், உண்மையையும் பின்பற்றவும், மேலோட்டமான போக்குகளுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக "சிகரத்தை நோக்கி" உயர்ந்து செல்ல உழைக்கவும் தனது உரையில் அவர்களை ஊக்குவித்தார்.

மெலிசா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான திருத்தந்தையின் செய்தி: அக்டோபர் 29, வத்திக்கான் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு வழங்கிய மறைக்கல்வி உரையில் திருத்தந்தை, ஜமைக்காவைத் தாக்கிய மெலிசா சூறாவளியானது பேரழிவை ஏற்படுத்தியுள்ளது என்றும், இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்; வீடுகள், உள்கட்டமைப்பு மற்றும் பல மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன என்று எடுத்துரைத்து, அம்மக்களுக்குத் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்தார்.

மேலும், பேரழிவினால் உயிர்களை இழந்தவர்களுக்காகவும், தப்பி பிழைத்தவர்களுக்காகவும், புயல் மீண்டும் வருமோ என்ற அச்சத்தில் பதட்டத்தையும் கவலையையும் அனுபவித்து வருபவர்களுக்காகவும் செபிப்பதாக கூறிய திருத்தந்தை அவர்கள், அனைவருக்கும் தனது ஆழ்ந்த உடனிருப்பை வெளிப்படுத்தினார்.

இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்

02.10.2025 மைக்கேல்பட்டி மறைவட்ட இளைஞர் இயக்க செயற்குழுக் கூட்டம் ஆரம்பப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இதில் பங்கு இளைஞர் இயக்க பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். தொடர்ந்து மறைவட்ட நிர்வாகக்குழு தேர்தல் நடைபெற்றது. இவற்றில் பணிக்குழு செயலர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் கலந்துகொண்டு இயக்க செயல்பாடுகளுக்கான திட்டமிடலை மேற்கொண்டார்கள்.

மைக்கேல்பட்டி மறைவட்ட இளைஞர் இயக்க நிர்வாகப் பொறுப்பாளர்கள் விவரம் பின்வருமாறு

பெயர்	பொறுப்பு	பங்கு
செல்வன். கிளின்டன் ராபின்சன்	மறைவட்ட தலைவர்	புனல்வாசல்
செல்வி. கிறிஸ்டி பிரமிளா	மறைவட்ட து. தலைவர்	ஆச்சனூர்
செல்வன். செபஸ்டின்	மறைவட்ட செயலர்	மேலதிருப்பந்துருத்தி
செல்வி. ஷம்ருதி	மறைவட்ட து. செயலர்	திருவையாறு
செல்வி. பெனிடா பெரேரா	பொருளர்	பவனமங்களம்
செல்வன். ஜோஸ்வா	ஆண் பிரதிநிதி	மேகளத்தூர்
செல்வி. சோனா	பெண் பிரதிநிதி	சுக்காம்பார்
செல்வன். ஜெரால்டு	ஒருங்கிணைப்பாளர்	மைக்கேல்பட்டி

எதிர்வரும் காலங்களில் மைக்கேல்பட்டி மறைவட்ட அளவில் நடைபெறும் இளைஞர் இயக்க செயல்பாடுகளில் இப்புதிய பொறுப்பாளர்கள் முன்னின்று செயல்படுவார்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

02.10.2025 கும்பகோணம் மறைவட்ட இளைஞர் இயக்க செயற்குழு மற்றும் நிர்வாகக்குழு கூட்டம் அலுவலகத்தில் நடைபெற்றது.

05.10.2025 புள்ளம்பாடி மறைவட்ட முதன்மைகுரு மற்றும் மருத்துவமனை இயக்குநர் தந்தையை சந்தித்து இரத்ததான முகாம் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

07.10.2025 புள்ளம்பாடி மறைவட்ட குருக்களுக்கான மாதாந்திர தியானத்தில் கலந்துகொண்டு இரத்ததான முகாம் நடைபெறுவது தொடர்பான செய்திகளை பகிர்ந்து கொண்டு இளைஞர்களை பங்கேற்க செய்ய அன்பு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

17.10.2025 YCS / YSM மாணவர்களுக்கான இணையவழி செபமாலை நடைபெற்றது. இதில் கும்பகோணம் பங்குத்தந்தை இல்லத்தில் நடைபெற்ற செபமாலையில் 20 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு செபித்தனர்.

அறிவிப்பு

குடந்தை மறைவட்ட இளைஞர் பணிக்குழுவும் தொன்போஸ்கோ வழிகாட்டி மையம், திருச்சி இணைத்து நடத்தும் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் திருவையாறு பங்கில் நடைபெற இருக்கின்றது. எனவே பங்குத்தந்தையர்கள் அன்பு கூர்ந்து தங்கள் பங்குகளில் உள்ள இளைஞர்கள், இளம்பெண்களை இந்த முகாமில் பங்கேற்று பயன்பெற ஊக்கப்படுத்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நாள் : 15.11.2025 நேரம் : காலை 9.30 - 2.00 வரை

07.10.2025 மைக்கேல்பட்டி மறைவட்ட குருக்களுக்கான மாதாந்திர தியானத்தில் கலந்துகொண்டு நவம்பர் மாதம் 8,9 ஆகிய தேதிகளில் மைக்கேல்பட்டி மக்கள் மன்றத்தில்

திருமண தயாரிப்பு கருத்தரங்கு நடைபெறுவது தொடர்பான தகவல் கொடுக்கப்பட்டது.

நவம்பர் மாதம் திருமணத் தயாரிப்பு பயிற்சி நடைபெறும் இடங்கள்

வ.எண்.	தேதி	இடம்
1	நவம்பர் 01 மற்றும் 02 சனி மற்றும் ஞாயிறு	குழந்தை இயேசு திருத்தலம் நம்பர்-1, டோல்கேட், திருச்சி
2.	நவம்பர் 08 மற்றும் 09 சனி மற்றும் ஞாயிறு	மைக்கேல்பட்டி மறைவட்டம்
3.	நவம்பர் 15 மற்றும் 16 சனி மற்றும் ஞாயிறு	அருளானந்தர் மறைப்பணி நிலையம், கும்பகோணம்

இவண்,
அருள்பணி S. ஜான் கொர்னேலியுஸ்,
செயலர், இளைஞர் மற்றும் குடும்பநலப் பணிக்குழுக்கள்.

மறைக்கல்வி, நற்செய்தி அறிவிப்பு மற்றும் பெஸ்கி கலைக்குழு பணிக்குழுக்கள்

மறைக்கல்வி

07.10.2025 வேதியர்களின் மாதாந்திர கருத்தமர்வு கூட்டம் குடந்தை புனித அருளானந்தர் மறைப்பணி மையத்தில் நடைப்பெற்றது. குடந்தை கிளாரட் இல்ல அதிபர் தந்தை அவர்களால் தியான உரை வழங்கப்பட்டு ஒப்புரவு அருள்சாதனம் வழங்கி திருப்பலியுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

08,09.10.2025 புள்ளம்பாடி மறைவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தில் ஆண்டாய்வு நடைபெற்றது.

10.10.2025 அரியலூர் பங்கிலுள்ள அனைத்து பள்ளிகளிலும் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தில் ஆண்டாய்வு நடைபெற்றது.

14,15,16,17.10.2025 பெரம்பலூர், பாளையம், துறையூர், பெருமாள்பாளையம், கோட்டப்பாளையம், முசிறி, தொட்டியம் பங்குகளிலுள்ள பள்ளிகளில் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தில் ஆண்டாய்வு நடைபெற்றது.

24,25.10.2025 மிக்கேல்பட்டி, மணத்திடல், திருப்பந்துருத்தி, சுக்காம்பார், அ. பூண்டி, மேகளத்தூர் பங்குகளிலுள்ள பள்ளிகளில் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தில் ஆண்டாய்வு நடைபெற்றது.

28,29,30,31.10.2025 வரதராஜன்பேட்டை, புதுக்குப்பம், தென்னூர், ஆண்டிமடம், வடவீக்கம், குமிழங்குழி, விழப்பள்ளம் பங்குகளிலுள்ள பள்ளிகளில் மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தில் ஆண்டாய்வு நடைபெற்றது. ஆய்வின்போது மறைக்கல்வி மற்றும் நன்னெறி பாடத்தின் முக்கியத்துவம் குறித்தும், இது வாழ்க்கைக்கான பாடம் என்பதையும் எடுத்துக்கூறி தொடர்ந்து இந்த பாடங்களை ஆர்வம் குறையாமல் நடத்துமாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

11.10.2025 புள்ளம்பாடி மற்றும் ஜெயங்கொண்டம் மறைவட்ட பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஒருநாள் தியானம் வடுகர்பேட்டை, புனித ஆரோக்கிய அன்னை

திருத்தலத்தில் நடைபெற்றது. தியானத்தை தஞ்சை மறைவட்டம் அருள்தந்தை A. அலெக்சாண்டர் அவர்கள் வழிநடத்தினார்கள்.

பெஸ்கி

12.10.2025 திருக்காவலூர் பங்கில் அருட்தந்தை ஆல்பர்ட் M. புஷ்பராஜ் (பிங்குத்தந்தை) அவர்கள் நிறைவேற்றிய திருப்பலியும், 22.10.2025 கும்பகோணம் தூய இருதய ஆண்டவர் இளங்குரு மடத்தில் அருட்தந்தையர்கள் A. மார்டீன் தே போரஸ், A. யூஜின்டோனி ஆகியோர் நிறைவேற்றிய திருப்பலியும் பெஸ்கி கலைக்குழுவால் ஒலி, ஒளிப்பதிவு செய்யப்பட்டு மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட உதவி செய்யப்பட்டது.

நாள்தோறும் கீபோர்டு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இவண்,
அருள்பணி A. இராஜமாணிக்கம்,
இயக்குநர், மறைப்பணி மையம்.

விவிலியம் மற்றும் அன்பிய பணிக்குழுக்கள்

இந்த மாதம் விவிலிய கட்டுரை போட்டிக் குறித்த குறுந்தகவலானது அனைத்து பங்குகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 95 பங்குகளைச் சேர்ந்த இறைமக்களும் இப்போட்டியில் சிறப்பாக பங்கு பெற்றார்கள்.

இம்மாதம், விவிலிய நாட்குறிப்பேட்டிற்கான பணிகள் நிறைவு பெற்று, அனைத்து பங்குத் தந்தையர்களையும் தொடர்புகொண்டு தேவைப்படும் பிரதிகளின் எண்ணிக்கை பெறப்பட்டது.

பெரம்பலூர் பங்கில் அன்பியத்திற்கான ஆண்டு விழாவும் அன்பிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுத்தல் பணியும் நடைபெற்றன.

இவண்,

அருள்பணி. I. ஜான் கென்னடி,

செயலர், விவிலியம் மற்றும் அன்பிய பணிக்குழுக்கள்.

பொதுநிலையினர் பணிக்குழு

26, 27, 28-09-2025 : சிவகங்கை மறைமாவட்ட நற்செய்தி பணிக்குழு, தேவகோட்டையில் நடத்திய மூன்று நாட்கள், நற்செய்தி மாநாட்டில் பல்வேறு மறைமாவட்டங்களைச் சேர்ந்த 1500 நபர்கள் கலந்துகொண்டனர். இதில் நமது மறைமாவட்டம் சார்பாக 15 பேர் கலந்துகொண்டனர். இதை பொதுநிலையினர் பணிக்குழு ஒருங்கிணைப்பு செய்தது.

05-10-2025 : இலால்குடி மறைவட்டம், No. 1 டோல்கேட், குழந்தை இயேசு திருத்தலப் பங்குத்தந்தை அருள்பணி. K. ஆரோக்கியசாமி அவர்களின் அழைப்பின் பேரில், அந்த பங்கில் பங்குப்பேரவை அமைப்பதற்காக, முறையாக தேர்தல் நடத்தப்பட்டு பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

05-10-2025: மாலை 4.30 முதல் 6.00 மணிவரை ஜெயங்கொண்டம் மறைவட்டத்திற்கான மேய்ப்புப் பணிப்பேரவைக் கூட்டமானது அந்த மறைவட்ட முதன்மை தந்தை பேரருள்திரு. ஜோசப் கென்னடி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. 24 பேர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் ஒருங்கிணைப்பாளர்களாக திரு. சின்னப்பராஜ் மற்றும் திருமதி. கிறிஸ்டி அனிதா தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

உறுப்பினர்கள் தங்கள் பங்கில் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்த கலந்தாலோசனை நடத்தப்பட்டு கருத்துக்கள் பெறப்பட்டது. அதன்படி வரவிருக்கும் 3 மாதங்களில், அவரவர் பங்குகளில் தங்களின் பங்குத்தந்தையுடன் கலந்தாலோசித்து தேவையான பணிகளை ஆற்றி, அதன் அறிக்கைகளை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

07-10-2025: மைக்கேல்பட்டி மறைவட்ட குருக்களின் மாதாந்திரக் கூடுகையானது பூண்டி பேராலயத்தில் நடைபெற்றது. பணிக்குழு குறித்த அறிமுக உரை நிகழ்த்தப்பட்டது. பங்குப்பேரவை அமைப்பது குறித்த வழிகாட்டுதல் கையேட்டை அனைத்துப் பங்குத்தந்தையாகளுக்கும் வழங்கவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. இதற்கு ஏற்பாடு செய்யப்படுமென அறிவிக்கப்பட்டது.

09-10-2025 : தமிழக நற்செய்திப் பணிக்குழு மற்றும் தமிழக அருங்கொடை பணிக்குழு இணைந்து நடத்திய ஒருநாள் கருத்தமர்வு திருச்சி அருங்கொடை இல்லத்தில் நடைபெற்றது. 80 பேர் கலந்துகொண்ட இக்கருத்தமர்வில், நமது மறைமாவட்டம் சார்பாக 22 பேர் கலந்து கொண்டனர். இக்கருத்தமர்வானது "மறைபரப்பு ஞாயிறு -2025: மக்களிடையே எதிர்நோக்கின் தூதுவர்களாக" என்ற மையச் சிந்தனையில் நடைபெற்றது.

10,11,12-10-2025: புள்ளம்பாடி மறைவட்ட முதன்மை தந்தையும், பங்குத்தந்தையுமான பேருள்திரு. சூசைமாணிக்கம் அவர்களின் அழைப்பிற்கிணங்க, சிவகங்கை மறைமாவட்ட நற்செய்திப் பணிக்குழுவைச் சேர்ந்த 4 நற்செய்திப் பணியாளர்கள், புள்ளம்பாடி பங்கில்

இல்லங்கள் சந்திப்பு நடந்தினர். மூன்று நாட்கள் நடந்த இப்பணியில், முதல் கட்டமாக சுமார் 100 குடும்பங்கள் சந்திக்கப்பட்டன.

இறைமக்களின் விசுவாச எழுச்சிக்கான தூண்டுகோலாக இது அமைந்தது. சந்திப்பு நடந்த குடும்பங்களின் ஆன்மிக நிலைக் குறித்து பங்குத்தந்தையிடம் தெரிவிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக மீதமுள்ள குடும்பங்களை வரும் நவம்பர் மாதத்தில் சந்திக்கப்பட உள்ளனர்.

இப்பணிகளுக்கு ஒருங்கிணைப்பாளராக சிவகங்கை மறைமாவட்ட நற்செய்திப் பணிக்குழு செயலர் அருள்சகோதரர். அகஸ்டின், திருஇருதய சபை, அவர்கள் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நவம்பர் 2025 செயல் திட்டங்கள்:

1. 0.8-11-2025 அன்று கும்பகோணம் மறைவட்டத்திற்கான மேய்ப்புப்பணிப் பேரவை கூட்டமானது கும்பகோணம் பங்குப் பேராலய பங்குத்தந்தை இல்லத்தில் நடைபெற உள்ளது.

2. 16-11-2025-ல் மைக்கேல்பட்டி மறைவட்டத்திற்கான மேய்ப்புப்பணிப் பேரவைக் கூட்டம் மைக்கேல்பட்டி பங்கு ஆலயத்தில் நடைபெற உள்ளது

3. புள்ளம்பாடி பங்கு குடும்பங்கள் சந்திப்பின் இரண்டாம் கட்டம் நடைபெற உள்ளது.

4. நவம்பர் 27 முதல் 30 வரை ஆசிய திருஅவைகள் இணைந்து, 'Great Pilgrimage of Hope' என்ற மையக்கருத்தில் Malaysia, Penang-ல் நான்கு

நாள் கருத்தமர்வு நடத்தப்படவுள்ளது. தமிழக ஆயர் பேரவையால் தேர்வு செய்யப்பட்டுள்ள நமது மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழுச் செயலர் கலந்துகொள்ளவுள்ள இக்கருந்தமர்விற்கான ஏற்பாடுகளை இந்தியத் திரு அவை சார்பாக CCBI செய்துள்ளது.

இவண்,
திரு. செ. பாப்பு வில்லியம்,
செயலர், பொதுநிலையினர் பணிக்குழு.

பெண்கள் பணிக்குழு

05.10.2025 சுக்காம்பார் பங்கில் பங்குத்தந்தை அவர்கள் தலைமையில் கருத்தமர்வு கூட்டம் நடைப்பெற்றது. பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பெண்கள் இயக்கம் தொடங்கப்பட்டது.

06.10.2025 பவனமங்கலம் பங்கில் பங்குத்தந்தை அவர்கள் முன்னிலையில் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு பெண்கள் இயக்கம் தொடங்கப்பட்டது.

07.10.2025 புள்ளம்பாடி மறைவட்ட அருட்தந்தையர்களுக்கான மாதாந்திர தியானம் மலத்தான்குளம் பங்கில் நடைப்பெற்றது. கலந்தாய்வு கூட்டத்தில் பணிக்குழு செயலர் அவர்களுடைய பங்குகளில் பெண்கள் இயக்கம் தொடங்க, புதுப்பிக்க ஒத்துழைப்பும், ஆலோசனையும் கேட்கப்பட்டது.

08.10.2025 கும்பகோணம் புனித அன்னாள் மெட்ரிக் பள்ளியில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்புவரை உள்ள மாணவிகளுக்கு சுகாதார விழிப்புனர்வு கருத்தமர்வு அருள்சகோதரி தலைமையாசிரியை அவர்கள்

முன்னிலையில் செல்வி கனிமொழி, ஆசிரியை, அருள்சகோதரி. ஸ்கொலாஸ்டிகா, செயலர், வேதியர் மரிய புஷ்பம் அவர்களால் கருத்துக்கள் வழங்கப்பட்டன. 900 க்கு மேற்பட்ட மாணவிகள் மகிழ்வுடன் பங்கேற்று பயனடைந்தார்கள்.

11.10.2025 பூண்டி பேராலய தியான இல்லத்தில் பெண்கள் இயக்க பொறுப்பாளர்களுக்கான கூட்டம் பணிக்குழு செயலர் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. 30 பெண்கள் பங்கேற்று பயனடைந்தார்கள்.

14,15,16.10.2025 எஸ். புதூர், வடகரை, செம்போடை ஆகிய பங்குகளில் அருள்தந்தையர்களையும், பெண்களையும் சந்தித்து, இயக்கம் தொடங்க தயாரிப்பு பணிகள் செய்துதரப்பட்டன.

21,22.10.2025 மாத்தூர், வில்லியவரம்பல் பங்குகளில் பெண்கள் இயக்க பொறுப்பாளர்கள் சந்திக்கப்பட்டார்கள். நாச்சியார்கோயில் பங்கு, அந்தோணியார்புரம் பகுதியில் இயக்க பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பெண்கள் இயக்கம் தொடங்கப்பட்டது.

25.10.2025 காணியிருப்பு பங்கில் பங்குத்தந்தை அவர்கள் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டு, பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பெண்கள் இயக்கம் தொடங்கப்பட்டது.

28-30.10.2025 அம்மன்பேட்டை பங்குத்தந்தை அவர்களையும், பெண்களையும், திருவிடைமருதூர் பகுதியில் உள்ள பெண்களையும் சந்தித்தோம்.

இவண்,

அருள்சகோதரி. ஸ்கொலாஸ்டிகா, DSMP

செயலர், பெண்கள் பணிக்குழு.

அருங்கொடை பணிக்குழு

1) 02.09.25 கூவத்தூர் தூய அந்தோணியார் ஆலயத்தில் சிறப்பு ஜெப வழிபாடு நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு இறையாசிர் பெற்றனர்.

1. 03.10.25 கும்பகோணம் தூய இருதய மருத்துவமனையில் மாலை 6 மணி முதல் 8 மணி வரை பாவ சங்கீர்த்தன வழிபாடும் நற்கருணை வழிபாடும் திருப்பலியும் நடைபெற்றன அங்கு உள்ளவர்கள் இதில் கலந்து கொண்டு இறையாசிர் பெற்றனர்.

2. 04.10.25 சலேத் அன்னையின் திருத்தலத்தில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை சிறப்பு நற்செய்திக் கூட்டம் மற்றும் திருப்பலி நடைபெற்றன. இதில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறை ஆசிர் பெற்றனர். அன்று மாலை அரியலூர் தூய லூர்து அன்னை ஆலயத்தில் சிறப்பு நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இதில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறை ஆசிர் பெற்றனர்.

3. 5.10.25 தமிழக அளவில் நற்செய்தி கூட்டம் பூண்டி மாதா தியான இல்லத்தில் நடைபெற்றது. அதில் 300க்கும் மேற்பட்டோர் பல மறைமாவட்டங்களிலிருந்து வந்து கலந்து கொண்டு இறையாசிர் பெற்றனர்.

4. 7.10.25 காலை 11:00 மணி முதல் 2 மணி வரை சிறப்பு நற்செய்தி கூட்டம் நால்ரோடு தூய அந்தோனியார் திருத்தலத்தில் நடைபெற்றது. அன்று மாலை கூவத்தூர் தூய அந்தோனியார் ஆலயத்தில் சிறப்பு நற்செய்தி கூட்டம் திருப்பலியோடு நடைபெற்றது. 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறை ஆசிர் பெற்றனர்.

5. 11.10.25 ஏலாக்குறிச்சி தூய அடைக்கல அன்னை ஆலயத்தில் காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை சிறப்பு

நற்செய்திக் கூட்டம் நடந்தது. இதில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து இறையாசிர் பெற்றனர்.

6. 12.10.25 அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை சிறப்பு நற்செய்தி கூட்டம் கும்பகோணம் தூய அருளானந்தர் மறைப்பணி நிலையத்தில் நடைபெற்றது. இதில் 400க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையாசிர் பெற்றனர்.

7. 13.10.25 அன்று மாலை 6 மணி முதல் 9 மணி வரை ஆச்சனூர் பங்கு வடுகக்குடி கிராமத்தில் சிறப்பு நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இதில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறை ஆசிர் பெற்றனர்.

8. 15.10.25 அன்று காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை இறை மக்கள் அருங்கொடை அலுவலகம் கும்பகோணத்தில் தனிப்பட்ட விதத்தில் ஜெபித்து விட்டு செல்ல 30 குடும்பங்கள் வந்தார்கள். இவர்கள் அனைவரும் இறை ஆசிர் பெற்று சென்றனர்.

9. 18.10.25 அன்று வரதராஜன்பேட்டை பங்கு சேனாப்பள்ளம் பகுதி இறை மக்களுக்கு சிறப்பு நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இதில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறையாசிர் பெற்றனர்.

10. 23.10.25 அன்று தொண்டமாந்துறை பங்கில் மாலை 6 மணி முதல் 9 மணி வரை சிறப்பு நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இறை ஆசிர் பெற்றனர்.

11. 28.10.25 அன்று காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை இறைமக்கள் கும்பகோணம் அருட்கொடை அலுவலகத்தில் சந்திக்கப்பட்டார்கள். இறை ஆசிர் பெற்றனர்.

இவண்,

திரு. A. யூஜின் டோனி,

செயலர், அருங்கொடை பணிக்குழு.

பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு

17.09.2025 - 18.09.2025 ஜெயங்கொண்டம் மறைவட்டத்தில் நடைபெறும் மாலை நேர வகுப்பு ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற உறுப்பினர்களை பணிக்குழுவின் செயலர் அருள்பணி. A. இருதயராஜ் மற்றும் நடுமண்டல ஒருங்கிணைப்பாளர் திரு. தமிழரசன் ஆகியோர் நேரில் சந்தித்து தலித் கிறித்தவ விடுதலை ஞாயிறு பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களை பதிவு செய்தார்கள்.

01.10.2025 கடுவெளி கிளைக்கிராமத்தில் நடைபெறும் மாலை நேர வகுப்பு மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை பணிக்குழுவின் செயலர் அருள்பணி. A. இருதயராஜ், நடுமண்டல ஒருங்கிணைப்பாளர் திரு. தமிழரசன் மற்றும் திரு. பவுல் தனராஜ் ஆசிரியர் ஆகியோர் நேரில் சந்தித்து ஸ்வீடன் நாட்டில் பணிபுரியும் திரு. லூர்துதாஸ் அவர்கள் வழங்கிய கணினி கருவியை திரு மேத்யூஸ் ஆசிரியரிடம் கொடுத்தார்கள். இந்த கணினியைப் பயன்படுத்தி தலித் கிறிஸ்தவ மாணவர்களுக்கு கணினி பயிற்சி வழங்கப்படுகிறது. மேலும் இக்கணினியை வழங்க உதவி செய்த திரு. லூர்துதாஸ் அவர்களுக்கு கடுவெளி கிராம நாட்டாண்மைகள் மற்றும் பங்குத்தந்தை ஆகியோர் சார்பாக பணிக்குழுவின் செயலர் தந்தை நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

04.10.2025 மைக்கேல்பட்டி, இலால்குடி மறைவட்டங்களில் நடைபெறும் மாலை நேர வகுப்பு மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை பணிக்குழுவின் செயலர் அருள்பணி. A. இருதயராஜ் மற்றும் நடுமண்டல ஒருங்கிணைப்பாளர் திரு. தமிழரசன் ஆகியோர் நேரில் சந்தித்து திரு. லூர்துதாஸ் அவர்கள் வழங்கிய

நோட்டுக்கள், பேனா மற்றும் பென்சில் பாக்ஸ்களை வழங்கினார்கள்.

08.10.2025-10.10.2025 புள்ளம்பாடி மறைவட்டத்தில் உள்ள பள்ளிகளில் நடைபெறும் மறைக்கல்வி-நன்னெறி ஆண்டாய்விற்கு பணிக்குழுவின் செயலர் உதவி செய்தார்.

11.10.2025 - 13.10.2025 ஜெயங்கொண்டம் மறைவட்ட கிளைக்கிராமங்களில் உள்ள தலித் கிறிஸ்தவ மக்கள் மன்ற உறுப்பினர்கள் சந்திக்கப்பட்டார்கள்.

இவண்,

அருள்பணி. A. இருதயராஜ்,

செயலர், பட்டியலினத்தார்/பழங்குடியினர் பணிக்குழு.

கல்வி உதவித்தொகை நன்கொடை விவரம் அக்டோபர் - 2025

நெ.	விபரம்	தொகை
1	அருள்பணி G. கோஸ்மான் ஆரோக்கியராஜ், கும்பகோணம்	5000
2	அருள்பணி J. அமர்சிங், சிறிய மலர் மேல்நிலைப்பள்ளி, கும்பகோணம்	5000
3	அருள்பணி A. ஜேம்ஸ்ராஜ், சிறிய மலர் மெட்ரிகுலேசன் பள்ளி, கும்பகோணம்	5000
4	அருள்பணி S.A. அமல்ராஜ், சிறிய மலர் மாணவர் இல்லம், கும்பகோணம்	5000
5	சிறிய மலர் துவக்கப்பள்ளி, கும்பகோணம்	2000
6	அருள்பணி L. பெஞ்சமின், குலமாணிக்கம்	2000
7	அருள்பணி. I. ஆல்பர்ட் & அருள்பணி. A. புரூஸ்லின் பினித், குலமாணிக்கம்	5000
8	கிளாரட் இல்லம், கும்பகோணம்	3000
9	திருமணம், கும்பகோணம்	5000
	மொத்தம்	**37,000**

KUMBAKONAM DIOCESE NEWS LETTER





Renovated Annai Mahal: PSSS



Junior Clergy Meeting: Mettupalayam

Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.
E-mail: kumbakonamdiocese@gmail.com
Webpage : www.dioceseofkumbakonam.org.